# தவக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

மாற்றம் ஒன்றே மாறாததாக உள்ளது. மாற்றம் ஒன்றே நம்மை வாழ்வின் வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது. மாற்றம் ஒன்றே மானிடனை மகத்துவமிக்கவனாக்குகின்றது.

இந்த மாற்றம் நம்மிலே இந்த தவக்காலத்தில் நிகழ்கின்றதா என்பதுவே கேட்டுப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

பிரபஞ்சம் மாற்றத்தை காண்பதால் தான் பருவ மழை பொய்த்துப் போகின்றது.

வெப்பத்தின் உக்கிர நிலையும், பனியின் கொடூர முகமும், மனித இறப்பிற்கு காரணமாகின்றது.

இத்தகைய மாற்றங்களை காணும் மனிதன் மாத்திரம் மாற்றமேயில்லாது, மனிதத்தை காக்காது, போற்றாது, உயர்த்தாது, பேணாது இருக்கின்றான்.

போதனைகள் எல்லாம் வீணே என்று சொல்லும் அளவுக்கு, ஆதியிலே இருந்தது போல இன்றும் என்றும் சர்வத்திற்கும் அப்படியே பயணிக்கின்றான்.

வேறுபாடுகளையும், வித்தியாசங்களையும், பாகுபாடுகளையும் சொல்லி சொல்லி கடந்து நிற்க தெரியாது, அடிமைப்பட்டு நிற்பது அவனை பரிதாபத்திற்குள்ளாக்குகின்றது.

மாற்றத்தை மனதிலே விதைத்தால், மானுடம் செழிக்கும்.

பலியிலே பங்கேற்று பலன் பெற கேட்போம்.

## முதல் வாசக முன்னுரை (தொடக்க நூல் 22:1-2,9-13,15-18)

முதல் வாசகத்தில் ஆபிரகாம் என்னும் அன்பான தந்தை இறைவனுக்குப் பணிந்து, தம் ஒரே மகனையே பலியிட முன்வருகின்றார். இறைவன் அவரது இறைப் பற்றில் மகிழ்ந்து, அவரை ஆசிர்வதிக்கின்றார். கடவுளின் கட்டளையை நிறைவேற்றுவதில் எத்தகைய துன்பம் வந்தாலும் அதை பொருட்படுத்தாமல் கடவுளை நம்பி அக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கவேண்டும்.

## இரண்டாம் வாசக முன்னுரை (உரோமை 8:31-34)

விசுவாசமுள்ள மனிதர் தனது பலத்தைவிட இறைவனின் பலம் தன்னோடு இருப்பதை உணர்ந்தது துன்பங்களை எதிர்கொள்கிறார். ஏனெனில்ஆழமான விசுவாசம் உள்ளவர்கள் சார்பாக இறைவன் இருந்து எல்லா எதிர்ப்புகளிருந்தும் அவர்களைப் பாதுகாக்கின்றார் என்று புனித பவுலடியார் கூறுவதை வாசிக்க கேட்போம்.

**மன்றாட்டுக்கள்:**

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. அன்பார்ந்த மைந்தரே எம் இறைவா! திருஅவையின் பொறுப்பாளர்கள், உம் மாட்சிமையின் புகழை, பறைசாற்றும் நல் சாட்சிகளாக வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பார்ந்த மைந்தரே எம் இறைவா! எமது பாரத நாட்டை ஆள்வோர், மக்களை வேறுபாடுகளின் நிமித்தம் கூறுபடுத்தாமல், வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு பயணிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பார்ந்த மைந்தரே எம் இறைவா! ஆபிரகாமைப் போல நாங்களும், உம் திருவுளத்திற்கு பணிந்தவர்களாக வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பார்ந்த மைந்தரே எம் இறைவா! நம்பினவர்களை கைவிடாத தேவன் நீர் என்பதனை உணர்ந்து, நம்பிக்கையில் உயர்ந்து வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அன்பார்ந்த மைந்தரே எம் இறைவா! உமது மாட்சிமையை வாழ்வில் கண்டு, அதற்கேற்ப நாங்கள், உமது மகத்துவத்திற்கேற்ப வழிபட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com